**தலைப்பு 281 – கமநல அபிவிருத்தி திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 281 – கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் பிரகாரம் கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 யூலை 02 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தை தவிர, 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

எனது அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையிலும் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் உபபிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரித்து

பேணப்படுகிறது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக் காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்றிறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

### 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டததாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவே அல்லது கூட்டாகவே தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒருபகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்கலில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டன. பிழையானதாக காட்டுவதன் காரணமாக இடம் பெறுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களினால் எழும் தாக்கலினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கத்தினை பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களை தயாரித்தல் வேணடுமென்றே விட்டு விடுதல் பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடி ஒன்று ஏற்படுவதற்கு காரணமாகிறது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயம் ஒன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் பெருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்து.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கபட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள ்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கபட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணபட்டட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் மீளாய்வாண்டின் போதும் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| முன்னைய ஆண்டு அறிக்கையின் பந்திக்கான தொடர்பு | செயற்படுத்தப்பட்டிருக்காத பரிந்துரைகள் | இந்த அறிக்கையின் பந்திக்கான தொடர்பு |
|---|---|---|
| 1.6.1. (ஆ)(iv) | திணைக்களத்திற்கு சொந்தமான சகல சொத்தக்களும் மதிப்பாய்வு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும் | 1.6.1 (இ) |
| 1.6.1(ஆ)(ii) | திணைக்களத்தில் கைதவிர்க்கப்பட வேண்டுமென பரிந்துரைக்கப்பட்ட சகல சொத்தக்களும் குறித்த ஆண்டில் கைதவிர்க்கப்பட வேண்டும். | 1.6.3. (அ) |

## 1.6. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 வருமானமற்ற பெறுவனவுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சுற்றுலா விடுதி வாடகை, இயந்திர வாடகை மற்றும் இயந்திர தவறான பயன்படுத்தலிருந்தான வருமானமாக ரூபா 8,579,831 ஆன மொத்தம் இனங்காணப்பட்டு விவசாய பங்களிப்புகளிற்கு மாற்றியமையால் அரசாங்க வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்திற்கு சொந்தமான சுற்றுலா விடுதிகளின் பராமரிப்பு மற்றும் திருத்தங்களிற்காக திரண்ட நிதியத்திலிருந்து ஒதுக்கப்படவில்லை, சொல்லப்பட்ட சுற்றுலா விடுதிகள் முறையான வழிகளில் சுற்றுலா விடுதிகளின் பராமரிப்பு நோக்கத்திற்காக உரிய விவசாய சேவை நிலைய குழுக்களிற்கு மாற்றப்பட்டிருந்தது மற்றும் சொல்லப்பட்ட நிதி சகல பராமரிப்புகளையும் மேற்கொண்ட திருத்த வேலைகளையும் மேவ வேண்டும். ஆகவே, சம்பந்தப்பட்ட பராமரிப்பு செலவினங்களை மேவுவதற்கு குழு நிதியை சுற்றுலா விடுதி வருமானத்தை செலவு வைப்பதற்கு ஒழுங்குகள் செய்ய வேண்டும். | அரசாங்க சொத்துக்களிலிருந்தான வாடகை வருமானம் அந்த வருமான தலைப்பிற்கு செலவு வைக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ii) கண்டி மாவட்ட விவசாய அபிவிருத்தி அலுவலகம் அமைந்திருந்த பொறி வாடகை மற்றும் விவசாய உபகரண கடை மற்றும் உணவுச் சாலையிலிருந்து பெறப்பட்ட ரூபா 1,394,000 தொகை அந்த அலுவலகத்தின் ஊழியர் நலன்புரி சங்கத்திற்கு வழங்கப்பட்டிருந்தமையால் அரசாங்க வருமானமாக பதியப்பட்டிருக்கவில்லை. | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | அரசாங்க சொத்துக்களிலிருந்தான வாடகை வருமானம் அந்த வருமான தலைப்பிற்கு செலவு வைக்க வேண்டும். |
| (iii) 2020 ஆம் ஆண்டில் விவசாய திணைக்களத்தால் 2,000,000 பசுமையான தோட்டங்களை விருத்தி செய்வதற்கான நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் ரூபா 5,483,974 இருந்தது. ரூபா 2,883,974 கொடுப்பனவு செய்த பின்னர் இருந்த விவசாய திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய வருமானத்தில் ரூபா 2,600,000 விவசாய அபிவிருத்தி நிதியத்திற்கு செலவு வைக்கப் பட்டமையால் அரசாங்க வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | மேற்படி வேலைகளிற்காக விவசாய பணிப்பாளர் நாயகத்திடமிருந்து ரூபா 2,883,974 ஆன தொகையை கோரியிருந்தது. இதன்படி, சம்பந்தப்பட்ட தொகை மேற்படி வேலைகள் செய்யப்படும் வரை விவசாய அபிவிருத்தி நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | விதைதாணிய விற்பனை வருமானம் அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும். |

### 1.6.2. அரசாங்க கடமைகளின் கட்டுநிதி ஏற்பாட்டுக் கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்கள கட்டுப்பாட்டு கணக்கு மீதி ரூபா 300,238,146 ஆக இருந்தது ஆனால், தனிப்பட்ட வகைப்படுத்தல் பொழிப்பு மீதி ரூபா 297,798,523 ஆக இருந்தது. இதன்படி, மீதிகளிற்கு இடையில் ரூபா 2,439,623 வித்தியாசம் இனங்காணப்பட்டு திருத்தப்பட்டிருக்கவில்லை. | இந்த வித்தியாசம் நீண்டகாலமாக இனங்காணப்படாத வரவு மீதியாக இருந்துடன் 2023 ஆம் ஆண்டில் இனங்கண்ட சில மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு நிறுவனங்களிற்கு அனுப்பபட்டிருந்தது. இந்த மீதிகளை கண்டுபிடிப்பதற்கு இயலுமான வழியில் தகவல்கள் சேகரிக்கப்படுகின்றன. அத்துடன் விவசாய அமைச்சு மற்றும் நிதி அமைச்சினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தலின் பிரகாரம் 2024 அம் ஆண்டில் தீர்ப்பனவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. | வித்தியாசம் திருத்தப்பட வேண்டும். |

### 1.6.3 ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 ஆம் ஆண்டிற்காக நிதியல்லா சொத்துக்கள் கூற்றின் இறுதி மீதியானது 2023 ஆம் ஆண்டில் ஆரம்ப மீதியாக கொண்டு வருவதில் ரூபா 8,251,572,806 ஆன தொகை அதிகமாக கணக்குகளில் காட்டப்பட்டிருந்தன. | அரச கணக்குகள் திணைக்களத்தின் அட்டவணை SA80 படிவத்தின் பிரகாரம், 2023 திசெம்பரில் 2022 ஆம் ஆண்டு இறுதி மீதியானது 2023 ஆம் ஆண்டு ஆரம்ப மீதியாக நிதியல்லாத சொத்தாக சரியாக கருதப்பட்டிருந்தது. ஆனால், அரச கணக்குகளில் திணைக்களத்தல் வெளியிடப்பட்ட சொத்துக்களிற்கான படிவம் SA 82 இன் பிரகாரம் ஆரம்ப மீதிகளில் வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டதுடன் ஆரம்ப மீதியில் வேறுபாடுகள் உள்ளதுடன் வேறுபாடுகள் இனங்காணப்பட்டு திருத்தம் செய்வதற்காக முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | சரியான மீதிகள் முற்கொண்டுவரப்பட வேண்டும். |
| (ஆ) | பொலநறுவை, மொனறாகலை, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களிலுள்ள விவசாய சேவை நிலையங்களிற்கு உடமையான காணி மற்றும் கட்டிடங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | விவசாய சேவை நிலையங்களின் காணி மற்றும் கட்டிடங்கள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்காததுடன் மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு மதிப்பீட்டு திணைக்களம் மதிப்பீடு செய்து அனுப்புமாறு மாவட்ட அலுவலகங்களிற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. | விவசாய சேவை நிலையங்களிற்கு உடமையான காணி மற்றும் கட்டிடங்கள் உடனடியாக மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | ஹம்பாந்தோட்டை மாவட்ட அலுவலகத்தில் ரூபா 4,011,941 பெறுமதியான அலுவலக உபகரணம், கணனிகள், மின்சார உபகரணங்கள் மற்றும் நிர்மாண உபகரணங்கள் என்பன நிதியல்லா சொத்துக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | ஹம்பாந்தோட்டை மாவட்டம் தொடர்பான சொத்துக்கள் மாத்திரமே மே மாதத்திற்கான கணக்கு பொழிப்பு அறிக்கையில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கட்டாயமாக சகல சொததுக்களும் கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஈ) | 2023 ஆகஸ்ட் 24 இல் வழங்கப்பட்ட 06/2013 ஆம் இலக்க சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாம், 2023 திசெம்பர் 31 இற்கு முன்னர் கட்டுப்பாட்டாளர் நாயத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காத அரச துறை வாகன உள் வருகைகளிற்கான மாதிரி தயாரிக்கபட்டிருக்கவில்லை. | 2023 ஆகஸ்ட் 24 இல் வழங்கப்பட்ட 06/2023 ஆம் இலக்க சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நாங்கள் ஒன்லைன் சொத்து முகாமைத்துவ முறைமையின் (NFAMS) கீழ் எங்களுடைய திணைக்களத்தின் வாகன மாதிரிகள் தொடர்பான தகவல்கள் அறிக்கையிட்டிருந்தோம் | வாகனம் மற்றும் இயந்திரங்களின் வகை தயாரிக்கப்பட்டு சகல தரவுகளும் பதிவு செய்யப்பட வேண்டும். |

### 1.6.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வாகனங்கள் தொடர்பான வாகன விபத்துக்கள் நிகழ்ந்த திகதியிலிருந்து பரிமாற்றப்பட்ட சகல நேரொத்த தகவல்களையும் கொண்டிருக்கின்ற கோவை பேணப்பட வேண்டும். ஆனால் மீளாய்வாண்டின் போது நிகழ்ந்த 02 வாகன விபத்துக்கள் தொடர்பில் அத்தகை கொவைகள் எதுவும் பேணப்பட்டிருக்கவில்லை. | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | வாகன விபத்துக்கள் தொடர்பான சகல நேரொத்த பரிமாற தகவல்களையும் கொண்டிருக்ககின்ற கோவைகள் பேணப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்தவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2 நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் கட்டிடம் மற்றும் பராமரிப்பு செலவினங்களிற்காக ரூபா 2,000,000 ஆன ஒதுக்கீட்டின் 31 சதவீதம் திருப்பி அனுப்பபட்டிருந்ததுடன் அநுராதபுர மாவட்ட அலுவலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 320,000 ஒதுக்கிட்டின் 99 சதவீதம் திருப்பி அனுப்பபட்டிருந்தது. | மீண்டெழும் செலவினங்களின் கீழ் கட்டிட பராமரிப்பிற்கான ஏற்பாடுகள் விடுவிக்கப்பட்ட போதிலும் அநுராதபுர மாவட்ட அலுவலம் மீண்டெழும் செலவினங்களின் கீழ் குறித்துரைக்கப்பட்ட செலவுகளை செய்திருக்கவில்லை. அந்த திருத்தங்கள் முழுமையான புதுப்பித்தல் வேலைகளை பூர்த்தியாக்கும் நோக்கில் மூலதனச் செலவின ஒரு பகுதியாக கருதப்பட்டன. | ஏற்பாடுகளை சரியான வழியில் பயன்படுத்த வேண்டும். |

### 2.2 கடமைகளும் பொறுப்புக்களும்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 நவாமபர் 01 ஆந் திகதிய 05/2023 ஆம் இலக்க அரச கணக்குகள் திணைக்களச் சுற்றறிக்கையின் 06 ஆம் பந்தி மற்றும் 2023 நவம்பர் 01 ஆந் திகதிய 04/2023 ஆம் இலக்க அரச கணக்குகள் திணைக்கள சுற்றறிக்கை 4.5 ஆம் உட்பரிவு என்பவற்றின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்கான படிவத்தின் இணைப்பு (III) இன் பிரகாரம் கடமைகளிற்கும் பொறுப்புகளிற்கு பயன்படுத்தப்பட வேண்டும். ரூபா 5,412,273 செலவழித்து கடமைகள் | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை பிரகாரம் புதிய இணையதள பக்கத்தில் கடமைகள் மற்றும் பொறுப்புக்களை உள்ளடக்கி ஏற்றுவதற்கு ஒழுங்குகள் செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான படிவம் தயாரித்து இணைய தளப் பக்கத்தில் கடமைகளும் பொறுப்புக்களும் உள்ளடக்கிய படிவம் ஏற்றப்பட வேண்டுமென கூறப்பட்ட போதிலும் இதற்கு முரணாக செய்யப்பட்டது. | | |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 94(1) இல் வழங்கப் பட்டவையை தவிர வருடாந்த மதிப்பீடுகள் நிதிச் சுற்றறிக்கையில் ஏதாவது செலவினம் அல்லது ஏதாவது செலவினங்களிற்கான பொறுப்ப அல்லது சேவை அல்லது வழங்கல் என்பவற்றிற்காக ஏற்பட்டிருக்கவில்லை ஆனால், திணைக்களம் மீளாய்வாண்டில் 04 மீண்டெழும் செலவின விடயங்களின் ஏற்பாடுகளை விஞ்சி ரூபா 3,623,094 ஆன சேமிப்புகள் ஏற்பட்டிருந்தது. | CIGAS முறைமையின் தொழில்நுட்ப தவறு காரணமாக செலவினத் தலைப்பு 1403 மற்றும் 1302 செலவினத் தலைப்புகளில் பாதீட்டு ஏற்பாடுகளை உள்ளபடியான செலவினம் விஞ்சியிருந்தது. விலைப்பட்டியல் கொடுப்பனவு ஏற்பாடுகளை விஞ்சி செலுத்த வேண்டிய பொறுப்புப்பகிள் பெறுமதி 2023 ஒக்தோபர், நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களில் தலைப்பு 1402 செலவினத் தலைப்பில் ரூபா 1,507,979 தொகையும் 2023 திசெம்பர் மாதத்தில் 1409 செலவினத் தலைப்பின் கீழ் ரூபா 916,958 தொகையும் இருந்தது. 1301 செலவினத் தலைப்பின் கீழ் நிதி, பொருளாதார ஸ்திரதன்மை மற்றும் தேசிய கொள்கை அமைச்சின் 3/2022, 8/2022 மற்றும் 2023.05.22 ஆந் திகதிய 9/2022 ஆம் இலக்க சுற்றறிக்கைகளுடன் விவசாய அமைச்சின் செயலாளரின் 2023.05.31 ஆந் திகதிய கடிதம் (குறிப்பு இல. 4/6/1/பாதீடு.மதிபீடு/2023) என்பவற்றின் பிரகாரம், செயற்திட்ட அமுலாக்கலிற்காக அனுமதி கடிதங்கள் பெறப்பட்டிருந்தும் அதிகளவான செயற்திட்டங்கள் இதுவரை தொடங்கப்பட்டது. ஆண்டின் இறுதியில் மேற்குறித்த செலவினங்களிற்காக பங்களிப்பு செய்யப்பட்டிருந்தன. | ஏற்பாடுகளைத் தவிர்த்து பொறுப்புகள் அல்லது செலவினங்கள் உள்ளடக்கப்பட வேண்டியதில்லை. |

## 2.3 ஏனைய அமைச்சுகள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களால் செய்யப்பட்ட ஏற்பாடுகளின் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) **விவசாய அமைச்சு காலநிலை மாற்ற ஒருங்கிணைந்த விவசாய செய்ற்திட்டம்.** | | |
| (i) மீளாய்வாண்டின் போது பொலநறுவை மாவட்ட விவசாய அபிவிருத்தி அலுவலகம் விவசாய அமைச்சின் காலநிலை மாற்ற ஒருங்கிணைந்த செயற்திட்டத்தின் கீழ் ரூபா 45,750,089 ஆன தொகை ஒதுக்கப்பட்டிருந்ததுடன் 09 குளங்கள் புதுப்பிக்கப்பட்டுடன் 05 குளங்களின் திருத்த வேலைகள் 2024 மார்ச் 28 அளவில் பூர்த்தியாக்கப் பட்டிருந்தது. எவ்வாறாயினும், அந்த குளங்களின் மண் மற்றும் கிரவல் அணைக்கட்டு வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டது, எவ்வாறாயினும், அவை மீளக் கட்டப்பட்டிருக்கவில்லை. | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | உத்தரவாத காலப்பகுதி காலாவதியாவதற்கு முன்னர் உரிய திருத்தங்கள் செய்யப்பட வேண்டும். |
| (ii) பொலநறுவை மாவட்ட விவசாய அபிவிருத்தி அலுவலகத்தில் கலன்ட சிறிய குளத்தின் புதுப்பித்தல் விவசாய அமைச்சின் கீழான காலநிலை மாற்ற ஒருங்கிணைந்த செயற்திட்டத்தின் கீழ் ரூபா 37,470,011 ஆன மதிப்பிடப்பட்ட கிரயத்தில் 2023 யூலை 28 இல் தொடங்கப்பட்டிருந்ததுடன் 2024 மார்ச் 28 அளவில் பூர்த்தியாக்க வேண்டுமென எதிபார்க்கப்பட்டது. எவ்வாறாயினும், புதுப்பித்தல் வேலைகள் தொடங்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | உரிய வேலைகள் தாமதமில்லாமல செய்யப்பட வேண்டும். |
| (iii) பொலநறுவை மாவட்ட விவசாய அபிவிருத்தி அலுவலகம் தெஹி அத்தவெல நீர்தேக்கத்தின் மதகு ஊடாக தண்ணீர் பாய்கின்ற மண் கால்வாயின் நிர்மாணம் பூர்த்தியாக்கப் பட்டிருந்தது. எவ்வாறாயினும், கால்வாயின் அணைக்கட்டு மழைநீரில் அடித்தச் செல்லப்பட்டதுடன் பண்ணை வெளிப் பக்க கட்டமைப்பு (Farm Turnout Structure) விலகிச் சென்றிருந்தது. | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | உரிய புதுப்பித்தல்கள் உத்தரவாத காலப் பகுதியின் போது செய்யப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) 2022 ஆம் ஆண்டின் ரூபா 51,565,000 ஆன ஒதுக்கீட்டின் கீழ் சுற்றுச்சூழல் அமைச்சு 2023 ஆகஸ்ட் மாதத்தில் கும்பிக்குளம் குளத்தை புனரமைப்பதற்கு ரூபா 45,000,000 செலவழிப்பதற்கு திட்டமிட்டிருந்ததுடன் 400 ஏக்கரிற்கு மேலாக புதிய நெல் வயல்களில் பயிரிட்டிருந்தது. எவ்வாறாயினும், 2013 இல் சுற்றுசூழல் மற்றும் புதுப்பிக்ககூடிய வலுசக்தி அமைச்சால் வனப் பகுதியொன்றை ஒதுக்கிவைத்திருந்தாகவும் அதற்காக வனவள பாதுகாப்பு திணைக்களம், தொல்பொருளியல் திணைக்களம் மற்றும் வனவிலங்குகள் திணக்களம் என்பவறறின் முன்னனுமதி பெற்றுக் கொள்ளாமல் வெளியிடப்பட்டிருந்தது. 2023 ஒக்தொபர் 31 அளவில் அணைக்கட்டு அபிவிருத்திக்காக ரூபா 24,373,998 ஆன செலவினம் ஏற்பட்ட போதிலும் அணைக்கட்டின் இடப்பக்க பகுதியில் 50-500 மீற்றர் மற்றும் அணைக்கட்டின் முற்பக்க பகுதியில் 1000 மீற்றர்கள் மற்றும் நீர் தேக்க அணைக்கட்டின் நடுப்பகுதி கிட்டத்தட்ட 50 மீற்றர்கள் இரும்பு பயன்படுத்தப் பட்டிருந்ததுடன் மழைக் காலத்தின் போது நீர்த் தேக்கத்திற்குள் அடித்தச் செல்லப்பட்டு இருந்தது. எவ்வாறாயினும், 2023 திசெம்பர் 31 வரையும் செயற்திட்ட வேலைகள் பூர்தியாக்கி 6 மாதங்கள் வரையும் பயிர்ச் செய்கை வேலைகள் எதுவும் அமுலாக்கப்படவில்லை. | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | நிர்மாணங்களிற்கு முன்னனுமதி பெறப்பட வேண்டியதுடன் அவசியமான திருத்த வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டு பயிர்ச் செய்கை தொடங்கப்பட வேண்டும். |
| (இ) **விவசாய அமைச்சால் வழங்கப்படுகின்ற பசளை உதவு தொகை** | | |
| (i) 2023 ஆம் ஆண்டில் காலபோக நெற் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டிருந்தத ஒரு விவசாயிக்கு ரூபா 3 வீதத்தில் ரூபா 11,147,000,000 பெறுமதியான 1,626,000 கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள் அச்சிடப்பட்டிருந்தது. பசளை தேவைப்பட்ட விவசாயிகளை இனங்காண முடியாமையால் ரூபா 1,162,077,900 பெறுமதியான 211,583 ஆன உறுதிச்சீட்டுக்கள் இரத்து செய்யப்பட்டிருந்தது. | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | விவசாயிகளிற்கான பசளை வழங்குதல், கொடுப்பனவு செய்தல் மற்றும் பசளை தேவைப்பட்ட குறித்த விவசாயிகளை இனங்காணல் என்பன முன் திட்டமிடல் செய்யப்பட வேண்டும். |
| (ii) மட்டக்களப்பு மாவட்டத்தில் 16 விவசாய சேவை நிலையங்கள் ஏப்ரல் முதல் யூலை 31 வரையான இடைக் காலப்பகுதி மற்றும் அறுவடைக்கு பிந்திய காலத்திற்காக 2023 யூன் நடுப்பகுதி வரை யூறியா | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | பட்டியலிடப்பட்ட திகதியில் நெற் பயிர்ச் செய்கைக்காக பசளை வழங்குவதற்கு ஒழுங்குகள் செய்ய வேண்டும். |

| | | |
|---|---|---|
| மற்றும் MOP இன் 464,530 கிகி பசளையை விநியோகித்திருந்தது. | | |
| (iii) 2023 மே 24 ஆந் திகதிய கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயத்தின் 7/5/8-335-04 ஆம் இலக்க கடிதத்தின் ii ஆம் உட்பிவிற்கமைய காலபோகத்தில் நெற் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டிருந்த விவசாயிகள் தொடர்பான தகவல்கள் Agrarian.lk இணைய தளத்தில் பதியப்பட வேண்டியதுடன் இதன்படி கொடுப்பனவுகள் வழங்கப்பட வேண்டும். மட்டக்களப்பு, மாத்தளை, நுவரெலியா, குருநாகல் மற்றும் கண்டி மாவட்டங்களில் அமைந்திருந்த 65 விவசாய சேவை நிலையங்கள் இதற்கு முரணாக செயற்பட்டிருந்தன. அதேபோல, 2023/24 பருவகாலத்தின் உதவுதொகைக்காக மாத்தளை மாவட்டத்தின் பல்லேபொல விவசாய சேவை நிலையத்தால் 14 களங்களின் அளவீட்டு வேலைகள் மேற்கொள்ளப் பட்டிருந்தது. 2024 சனவரி 10 அளவில் 153 துண்டுகளிற்கு மேலானவை முறைமைக்கு ஏற்றியிருக்கவில்லை அளவை செய்யப்பட்டிருந்த 862 காணித் துண்டுகள், முறைமைக்கு ஏற்றி வெளிப்படுத்த முடியாதவை மற்றும் அளவை செய்யப்பட்டிருக்காத 466 நெற் காணிகள் என்பற்றின் தகவல்கள் இணையத்தில் உள்ளடக்க வேண்டுமென ஆணையாளர் அறிவித்திருந்தார். | 2023/24 பருவகாலத்தின் நெல் பயிர்ச் செய்கை விவசாயிகளிற்கான உதவு தொகை வழங்குதல் தொடர்பான தகவல்கள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல் பிரகாரம் நாளதுவரையாககப் பட்டிருக்காததுடன் பொத்துகேர முகாமைத்துவ தகவல் சம்பந்தப்பட்ட தரவு முறைமையில் தவறுகள் அவதானிக்கப்பட்டிருந்தது. | GEO GOVIYA தரவு முறைமை உடனடியாக பூர்த்தி செய்து Agrarian.lk இணைய தளத்தில் நாளது வரையாக்குதல், இணைய தளத்தில் பதியப்பட்டிருந்த விவசாயிகளிற்கு மாத்திரம் பசளை வழங்க வேண்டும். |
| (iv) பெறப்பட்ட ரூபா 534,404,100 ஐ மட்டக்களப்பு மாவட்டத்தில் 16 விவசாய சேவை நிலையங்களின் 32,563 விவசாயிகள் ஒரே தடவை பசளை பெறுவதிலிருந்து நெல் பயிரிடப்பட்ட விவசாயிகள் பின்பற்றியிருந்த உயர் பருவகால தொடக்கமான ஒக்தோபர் மாதத்தில் விநியோகிக்கப் பட்டிருக்கவில்லை. | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | நிதிஉதவி தேவைப்படும் போது வழங்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (v) மாத்தளை மாவட்டத்தில் 2023/24 பருவகாலத்தின் நெல் பயிர்ச் செய்கைகாக 21,766 ஹெட்டெயர் இலக்கிடப்பட்டு மாவட்ட விவசாய அபிருத்தி அலுவலகத்தால் 14,366 ஹெட்டெயர் நெற் பயிர்ச் செய்கைக்காக அனுதிக்கப்பட்டதுடன் 2024 சனவரி 23 அளவில் 12,739 ஹெட்டெயருக்கு ரூபா 191,088,621 ஆன உதவு தொகை வழங்கப்பட்டது. இதன் விளைவால், கமநல சேவை நிலையங்களிலிருந்து பெறப்பட்ட தகவல்கள் 2023 திசெம்பர் 31 வரையும் மாவட்ட விவசாய அபிவிருத்தி அலுவலகத்தால் பட்டியலிடப்பட்ட பயிர்ச் செய்கை காலத்தின் போது 1,627 ஹெட்டெயர் நெற் பயிர்ச் செய்கைக்காக உதவு தொகை வழங்கப்பட்டிருக்கவில்லை. | விவசாய செவை அஅதிகார எல்லை மட்டத்தில் பல்வேறு பருவகால தொடக்கம் மற்றும் பயிர்ச் செய்கை பிரகாரம் உரிய தகவல்கள் பதியப் பட்டிருந்ததுடன் திறைசேரியிடமிருந்து பணத்தினை விடுவித்ததின் பிரகாரம் பணம் விடுவிக்கப் பட்டுள்ளதுடன் விவசாயிகளின் வங்கிக் கணக்குகள் திறப்பதில் எழுந்த பிரச்சனைகளால் நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை அதேநேரம் விவசாயிகள் ஒரு K.P.N.S பருவகாலத்தின் பிரகாரம் மாற்றப்பட்டிருந்தனர். உத்தியோகத்தர்கள் பல துறைகளில் கடமைகளை செய்கின்றமையால் நிலைய மட்டத்தில் தாமதம் உள்ளது. | பயிர்ச் செய்யப்பட்ட விவசாயிகள் இனங்காணப்பட வேண்டியதுடன் தேவைப்பட்டோருக்கு உதவு தொகை வழங்க வேண்டும். |

## 2.4. சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| கட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கான தொடர்பு | தொகை ரூபா | இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் | | | | |
| (i) நி.பி. 104(2) | 978,013 | திறைசேரியின் அரச நிதித் திணைக்களத்திற்கு ரூபா 50,000 பெறுமதிக்கு மேலான நட்டங்கள்/ சேதங்கள் அறிக்கையின் பிரதி அனுப்ப வேண்டும். ஆனால் 2023 மார்ச் 02 ஆந் திகதியளவில் ரூபா 978,013 பெறுமதியான (Checkpoint) 3200 வகை பரிசோதனை பயவெல் சாதனம் (Firewall) காணாமல் பேண தகவல் எதுவும் திறைசேரிக்கு முன்வைக்கப் பட்டிருக்கவில்லை. | இது தொடர்பான சட்ட நடவடிக்கை களிற்காக பொலீஸ் மா அதிபரிற்கு 2024.03.22 இல் CIBII 361/116 முறைப்பாட்டின் பிரதியொன்றை கோரி கடிதம் அனுப்பப்பட்டதுடன் இது தொடர்பில் பொறுப்புடைய நபர்களை இனங்காண்பதற்கு நிபி 104 இன் கீழ் புலனாய்வு மேற்கொள்வதற்கு 2024.04.16 இல் உத்தியோகத்தர் நியமிக்கப் | நட்டங்களிற்கு பொறுப்புடைய உத்தியோகத் தரை இனங்கண்டு நட்டங்களை அறவீடு செய்யப்பட்டு திறைசேரிக்கு அறிக்கையிட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | பட்டிருந்தார். இந்த அறிக்கை பெற்ற பின்னர் திறைசேரி அரச நிதி திணைக்களத்திற்கு அதன் பிரதி முன்வைக்கப்பட வேண்டும். | |
| | (ii) நி.பி. 396(ஈ) | 2,124,082 | காசோலைகள் வழங்கப்பட்டு 06 மாதங்கள் கடந்த பின்னரும் சமார்ப்பிக் கப்படாத 136 காசோலைகள் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | கருத்துரைகள் வழங்கப் பட்டிருக்கவில்லை. | பிரமாணங்க ளின் பிரகாரம் பணம் செலுத்த வேண்டும். |
| | (iii) நி.பி. 571 | 14,266,459 | 02 ஆண்டுகளை விஞ்சியிருந்த ரூபா 14,266,459 ஆன வைப்புகள் நி.பி இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | பெறப்பட்ட நிதிகள் திறைசேரி நிதிகளாக தீர்ப்பனவு செய்யப்பட்டுள்ளது. சகல மாவட்ட அலுவலகங்களிலும் ITMIS முறைமை ஊடாக திறைசேரியிடமிருந்து நிதிகள் கோருவதற்கு அறிவுறுத்தப்பட்டதுடன் கோரப்படாத வைப்புகள் அரச வருமானத்தற்கு செலவு வைக்க வேண்டும். | 02 ஆண்டுகளை விஞ்சியிருந்த வைப்புகள் பிரமாணப்படுத்த வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனக் கோவையின் 12.1 ஆம் பிரிவு | 9,238,699 | உத்தியோகத்தர் ஒருவருக்கு சம்பளத்திற்கு மேலாக கொடுப்பனவுகள் செலுத்தப்படுமாயின் கட்டாயமாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயத்தின் அனுமதி பெறப்பட வேண்டும். எவ்வாறாயினும், சுகுறு நீர்ப்பாசன செயற்திட்டம் மற்றும் தும்பிக்குளத்தின் புதுப்பித்தலிற்காக உத்தியோகத்தரின் சம்பளத்தின் 1/3 பகுதி படிகளாக 01 சதவீத மேந்தலைக் கிரயமாக 38 உத்தியோகத் தர்களிற்கு வழங்கப் | கருத்துரைகள் வழங்கப் பட்டிருக்கவில்லை. | திணைக்களம் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதி பெறப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | பட்டிருந்ததுடன் மேலதிக தொகையாக ரூபா 9,238,699 ஆன தொகை செலுத்தப்பட்டது. | | |
| (இ) | 2021 செப்தெம்பர் 29 ஆந் திகதிய PED/PMD/Cir/2021/01 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | 11,851,202 | சமுதாய அடிப்படை அமைப்புகளிற்கு வழங்கப்பட்ட ஒப்பந்தங்கள் உப ஒப்பந்தத்திற்கு விட வேண்டியதில்லை, ஆனால் ரூபா 11,851,202 ஆன ஒப்பந்த பெறுமதி கண்டி மாவட்டத்தில் கொடக்கடவெல ராஜா கால்வாய் மற்றும் குள அணைக்கட்டின் 04 புனர் நிர்மாண செயற் திட்டங்கள சுற்றறிக்கை அறிவுறுத்தல் பிரகாரம் செயற்படுத்தப் பட்டிருக்கவில்லை. | கருத்துரைகள் வழங்கப் பட்டிருக்கவில்லை | சுற்றறிக்கை பிரகாரம் ஒப்பந்தம் உப ஒப்பந்தத்திற்கு விட வேண்டியதில்லை |

## 2.5 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2012 பெப்ரவரி 29 ஆம் திகதிய 04/2012 ஆம் இலக்க சுறற்றறிக்கை பிரகாரம் விவசாயிகளுடைய வங்கிக் கணக்கினை கையாள்வதற்கு ‘‘தேசிய நெறிப்படுத்தல் குழு’’ என்ற பெயரில் திணைக்களத்தால் 2012 பெப்ரவரி 29 இல் குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அந்த குழு உத்தியோகத்தர்களது பொறுப்புகள் மற்றும் செயற்பாடுகள் எவ்வாறு விவசாயிகளுடைய வங்கி கணக்குகளைக் கட்டுப்படுத்தல் என்பன உள்ளடக்கப்படவில்லை. அத்துடன் தலைமை அலுவலகத்தில் பேணப்பட்ட விவசாயிகளுடைய வங்கிப் பிரிவின் நிதி மற்றும் நிதியல்லா கொடுக்கல் வாங்கல்கள் மீதான அறிக்கை தொடர்புபட்ட சட்ட ஏற்பாடுகள் இருக்கவில்லை. திறைசேரி அனுமதியில்லாமல் தொடங்கப்பட்டிருந்த வங்கி நடைமுறைக் கணக்கின் வங்கி மீதி 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா. 62,727,222 ஆக இருந்ததுடன் | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | திறைசேரியின் அனுமதியுடன் எழுத்து மூலம் அவர்களுடைய கடமைகளையும் பொறுப்புக்களையும் நிதிக்கூற்றில் வெளிப்படுத்தியிருக்கவில்லை |

| | | | |
|---|---|---|---|
| | நிலையான வைப்பிலுள்ள முதலீடு ரூபா 120,000,000 ஆக இருந்ததுடன் அதன் மீது பெறப்பட்ட வட்டி ரூபா 19,340,019 ஆன தொகையும் பெறப்பட்டது. அந்த தகவல் நிதிக்கூற்றில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | |

**2.6 வைப்புகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மொனறாகலை மாவட்டத்தில் தனமாவில சங்கிரி நீர் தேக்கத்தின் நிர்மாணத்திற்காக 2021 திசெம்பர் 20 இல் உணவு ஊக்குவிப்பு சபையிடமிருந்து பெறப்பட்ட ரூபா 400,000 தொகை அந்த நோக்கத்திற்காக பயன்படுத்தாமல் 2023 திசெம்பர் 31 வரை பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | மொனறாகலை மாவட்டத்தில் தனமாவில சங்கிரி நீர் தேக்கத்தின் நிர்மாணத்திற்காக உணவு ஊக்குவிப்பு சபையிடமிருந்து பெறப்பட்ட ரூபா 400,000 தொகை பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | பிரதான அலுவலகம் மற்றும் தொடர்பான வேலைகளிற்கான பணம் பொது வைப்புக் கணக்கில் வைப்புகள் நிறுத்தி வைக்க வேண்டும். |
| (ஆ) | 2022 திசெம்பர் 14 இல் உலக வங்கி ஐக்கிய நாடுகள் நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக தொடர்புபட்ட செயற்திட்டத்தின் 627378 ஆம் பற்றுச் சீட்டின் ஊடாக பெறப்பட்ட ரூபா 1,442,000 தொகை 06 மாதங்களாக பொது வைப்புக் கணக்கில் விடப்பட்டிருந்ததுடன் டீசல் உதவு தொகைக்கான உறுதிச்சீட்டுக் அச்சிடலிற்காக ரூபா 1,305,602 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | ஐக்கிய நாடுகள் உலக உணவு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் டீசல உதவு தொகை நிகழ்ச்சித்திட்டம் இரண்டும் ஒரே நேரத்தில் அமுலாக்கப்பட்டதுடன் ஆணையாளர் நாயகத்தின் அனுமதிப் பிரகாரம் சம்பந்தப்பட்ட பணம் டீசல் உதவு தொகை நிழ்ச்சித் திட்டத்திற்காக கமநல சேவைகள் நிலையத்தால் ஏற்பட்ட அச்சிடல் கிரயத்தை மேவுவதற்கு பயன்படுத்தப்பட்டிருந்தது. | செயற்திட்டங்களிற்காக பெறப்பட்ட பணம் அதற்காகவே பயன்படுத்த வேண்டும். |

**2.7 வங்கிக் கணக்கின் செயற்பாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு தலைமை அலுவலகம் மற்றும் மாவட்ட அலுவலகத்திற்கு 65 காசோலைகளிலிருந்து பெறப்பட்ட ரூபா 14,238,084 ஆன தொகை வங்கி கணக்கிணக்கக் கூற்றில் மாற்றப்படாத காசோலைகளாக காட்டப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அவை முறையாக அனுமதிக்கப்பட்டிருக்காததுடன் வருமானமாக அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | காசோலைகள் உடனடியாக காசாக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்திட்ட பூர்த்தியாக்கலில் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **சிறிய நீர்ப்பாசன மற்றும் சில்லறை நெல் பயிர்ச் செய்கை நிகழ்ச்சித்திட்டம்** | | |
| (i) சிறிய நீர்ப்பாசனம் மற்றும் தொடர்ந்தான நெல் பயிர்ச் செய்கை நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் 25 மாவட்டங்களை மேவி சுகுறு கிராமிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பசுமை இல்ல ஒரு பகுதி நிர்மாணத்திற்காக ரூபா 375,000,000 ஆன ஒதுக்கீடுகள் செய்யப்பட்ட போதிலும் மீளாய்வாண்டிற்காக பரிந்துரைக்கப்பட்ட 291 பசுமை இல்ல நிர்மாணங்களில் ரூபா 151,320,000 ஆன ஒதுக்கீட்டின் அடிப்படையில் 16 மாவட்டங்களில் 145 பசுமை இல்ல நிர்மாணங்கள் மாத்திரம் அமுலாக்கப்பட்டிருந்ததுடன் நிர்மாணத்தின் முன்னேற்றம் 49 சதவீதமாக இருந்தது. | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்பாடுகள் ஆகக்கூடியளவு பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ii) குருநாகல் மாவட்டத்தில் 21 கமநல நிலையங்கள் பசுமை இல்லங்களில் நிர்மாணத்திற்காக 2023 ஒக்தோபர் 28 முதல் 2023 திசெம்பர் 13 இற்கும் இடையில் ஒவ்வொன்றும் ரூபா 500,000 பயன்படுத்தி உடன்படிக்கை கைச்சாத்திட்டிருந்தது. | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டங்கள் தாமதமில்லாமல் தொடங்கப்பட வேண்டும். |

### 3.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(2) ஆம் பிரிவு மற்றும் அரச நிதித் திணைக்களத்தின் 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 10.2 ஆம் பிரிவிற்கமைய வருடாந்த செயலாற்றல் அறிக்கை வழிகாட்டல் இல. 14 இல் குறிப்பிடப்பட்ட படிவத்திற்கமைய கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டிற்காக வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதுடன் நிதிக் கூற்றுக்களுடன் சேர்த்து கணக்காய்விற்கு முறையாக சமர்ப்பிப்பதற்காக தேவையான ஒழுங்குகள் செய்யப்பட்டன மேலும், வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டு கணக்குகளுடன் சேர்த்து கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படும். | வருடாந்த வரைவு செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டு கணக்குகளுடன் சேர்த்து கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020 ஆம் இல்ல அரச நிதிச் சுற்றறிக்கையின் 12.1 ஆம் பிரிவின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் மற்றும் செயாற்றல் அறிக்கை தயாரித்து கணக்காய்விற்கு உட்படுத்த வேண்டும். 2019, 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளிற்காக திணைக்களத்தின் வருடாந்த செலாற்றல் அறிக்கை 150 நாட்களிற்குள் பராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டுகளிற்காக வருடாந்த செலாற்றல் அறிக்கை விவசாய அமைச்சால் பாராளு மன்றத்தில் முன்வைக்கப்பட்டிருந்தது. 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளின் செயலாற்றல் அறிக்கை விரைவில் அமைச்சால் முன்வைக்கப்படும். 2023 ஆம் ஆண்டில் வருடாந்த செயலாற்றல் அறிக்கையின் தயாரிப்பு இறுதிக் கட்டத்தில் உள்ளது. | வருடாந்த செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 3.3 வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் 2005 - 2008 வரையான செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் ஆண்டுகளிற்காக 2018 ஆம் ஆண்டு இறுதியளவில் 19 கமநல சேவை நிலையங்களிற்கு 7,231 சூரிய நீர் வழங்கல் முறைமைக்கு ரூபா 2,327,272,272 ஆன தொகை வழங்கப்பட்டிருந்தது. 2020 யூலை 03 இல் திறைசேரி செயற்பாடுகள் திணைக்கள பணிப்பாளர் நாயத்தின் கடிதத்தில் குறிப்பிட்டவாறு ரூபா 2,261,226,463 வழங்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டது. மீளாய்வாண்டு இறுதியில் வழங்கப்பட்ட முறைமைகளின் 90 சதவீதம் காணாமல் போயிருந்தது. பயன்படுத்தாத விவசாயிகளின் தகவல்கள் கண்டுபிடித்து செயற்படுத்த முடியாதிருந்தது. | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கைகளின் பிரகாரம் காணமல் போணதாக சாட்டுதல் செய்யப்பட்ட முறைமைகள் தொடர்பில் புலனாய்வுகள் நடாத்த வேண்டும். |
| (ஆ) | உலக வங்கி கடன் திட்டத்தின் கீழ் கோவிட் 19 நொய்தொற்றின் அவசர தேவையின் போருட்டு வசதிகளை உருவாக்குவதற்காக 2021 ஆம் ஆண்டில் பெறப்பட்ட ரூபா 113,847,389 ஆன ஒதுக்கீட்டை பயன்படுத்தி 06 மாவட்ட அலுவலகங்களில் 11 காட்சியறைகள் 2023 மே 31 அளவில் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அந்த காட்சியறைகள் 2024 பெப்ரவரி 29 வரையும் பயன் படுத்தப்படாத சொத்தாக இருந்தது. மேலும், அநுராதபுர மாவட்டத்தில் மதவாச்சி கமநல சேவை நிலைய காட்சியறையின் நிர்மாண வேலைகள் 2023 மே 31 வரையும் பூர்த்தி செய்யப்பட்டிருக்காமையால் ஏற்பட்ட தேறிய செலவினம் ரூபா 2,464,454 இற்காக ஒதுக்கீட்டுத் தொகை பெறப்பட்டிருக்கவில்லை. | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | வினைத்திறனாக அமுலாக்கப்பட்டிருக்காத செயற்திட்டத்தின் சகல இருப்புகளையும் கட்டாயமாக பயன்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | உலக வங்கி உதவி திட்டடத்தின் கீழ் காலநிலை மாற்ற விவசாய செயற்திட்டத்தின் கீழ் 10 மவட்டங்களில் 47 கமநல சேவை நிலையங்கள் அமுலாக்கப்பட்டதுடன் 2022 ஆம் ஆண்டில் விநியோகிக்கப்பட்ட ரூபா 248,658,432 பெறுமதியான 94 மரநடல் இயந்திரங்கள், 188 விதைநடும் இயந்திரங்கள், 188 புல் வெட்டும் இயந்திங்கள், 04 சக்கர உழவு இயந்திரங்கள் 01 மற்றும் 04 நெல் அறுவடை செய்யும் இயந்திரங்கள் போன்றன 2022 ஆம் ஆண்டிலிருந்து 2023 திசெம்பர் 31 வரையும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.<br>முன்னோட்ட திட்டமாக 188 மரம் நடும் இயந்திரங்கள் பயன்படுத்துவதற்கு எடுக்கப்பட்டதுடன் அது அவர்களுடைய செயற்பாடுகளுடன் இணங்காமையால் பயனற்று இருந்தது. மேலும் ரூபா 214,529,432 ஆக கிரயத்திலான பயன்படுத்தகூடிய 04 நெல் வெட்டு இயந்திரங்கள் மற்றும் 04 சக்கர உழவு இயந்திரங்கள் என்பன கமநல சேவை நிலையங்களிற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. ஆனால், இது அரச தனியார் பங்குபற்றல் (PPP) முகாமைத்திட்டத்தின் கீழ் பண்ணை இயந்திர உபகரண பிரிவுக்கு வழங்கப்பட்டிருந்தது. | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | பயன்படுத்தப்படாத உபகரணங்கள் உரிய நிறுவனங்களிற்கு திருப்பி அனுப்பியிருக்க வேண்டும். |
| (ஈ) | உலக வங்கி கடன் உதவியின் கீழ் சிறிய மட்ட விவசாய பங்குபற்றல் நிகழ்ச்சித்திட்டத்தால் (SAPP) இறக்குமதி செய்யப்படுகின்ற சோளங்களிற்காக வெளிநாட்டு நாணயத்தை சேமிக்கும் நோக்குடன் அம்பாறை, அநுராதபுரம், பதுளை, மொனறாகளை மற்றும் ஹம்பாந்தோட்டை போன்ற 05 மாவட்டங்களில் 40,000 ஏக்கர்கள் சோளம் பயிரிடப்பட்டன. கால போகத்தின் பின்னர் இந்த சோள பயிர்ச் செய்கை திட்டம் அமுலாக்கப்படுவதை தொடருவதற்கான முறை கிடைக்காமையால் இதனை செய்வதற்கு குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் விலங்குகளிற்கான பாரிய உணவு தட்டுப்பாடு என்பன செயற்திட்டத்தின் நோங்கங்களை அடைய முடியாதிருந்திருந்தது. | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | விலங்கினப் பெருக்க உற்பத்திக்கு தேவையான விதைகளின் பற்றாக்குறையை குறைப்பதே இச்செயற்திட்ட அமுலாக்கலின் உடனடி தீர்வாக இருக்க வேண்டும். |

## 3.4 உள்நாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்யாண்டின் திருத்தப்பட்ட செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் திணைக்களம் 3809 ஏக்கர் தரிசு நில பயிர்ச்செய்கைக்காக ரூபா 162,815,691 மில்லியனை ஒதுக்கியிருந்தது. எவ்வாறாயினும், 2986 ஏக்கர் மாத்திரம் பயிரிடப்பட்டிருந்ததுடன் ரூபா 137,616,325 ஆன தொகையே செலவழிக்கப்பட்டிருந்தது. | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.. | ஏற்பாடுகள் ஆகக் கூடியளவு பயன் பெறக்கூடியவாறு பயன்படுத்த வேண்டும். |
| | (i) பொலநறுவை மாவட்ட விவசாய அபிவிருத்தி அலுவலகம் சிறிய நீர்ப்பாசனம் மற்றும் தரிசு நில நெல் உட்கட்டமைப்பு அபிவிருத்தி செலவினம் என்பவற்றின் கீழ் ரூபா 4,558,012 ஆன தொகை செலவழித்திருந்ததுடன் றம்பேவா நீர்த் தேக்கத்தில் வேலைகள் பூர்த்தியாக்கப் பட்டிருந்தது. ஆனால், புனரமைக்கப்பட்ட அணைக்கட்டின் மேலாக விமான நடமாட்டம் காரணமாக அடித்துச் செல்லப்பட்டிருந்தது. | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | புதுப்பித்தலிற்கு முன்னர் ஏதாவது இடர்கள் ஏற்படின் அவற்றினை கவனிக்க வேண்டும். |
| | (ii) 25 ஏக்கர் நெல் பயிர்ச் செய்கை வயல்களிற்காக பாணந்துறை மற்றும் நாகொடை கமநல சேவை நிலையங்கள் தொடர்பான 04 களங்கள் தொடர்பில் ரூபா 1,180,172 ஆன தொகையை 2023 திசெம்பர் 31 இல் விவசாயிகள் அமைப்புக்கு செலுத்தியிருந்தது. எவ்வாறரினும், 2023 கால போகத்திற்காக நெல் அல்லாத பயிர்கள் பயரிடப்பட்டிருந்தன. பண்டாரகம் கமநல சேவை நிலையம் தொடர்புபட்ட 23 ஏக்கர் தரிசு நிலங்களை பயிர் செய்வதற்கு இலக்கிட்டிருந்த போதிலும் 2023 கால போகத்திற்காக 55 ஏக்கர் நெல் பயிரிடலிற்காக இலக்கிடப்ட்ட போதிலும் 07 ஏக்கரிலேயே நெல் பயிரிடப்பட்டிருந்தது. ஆனால், 23 ஏக்கர் பயிரிடலிற்காகவும் விவசாய அமைப்புகளிற்கு மொத்தமாக ரூபா 1,710,419 செலுத்தப்பட்டிருந்தது. ஆனால் நாகோடை கமநல சேவை நிலையத்திற்கு சொந்தமான 3 பயிர்ச் செய்கை நிலங்களில் பயிர்ச் செய்கைக்காக ரூபா 341,615 ஆன முற்பணம் செலுத்தப்பட்டிருந்த போது 30 சதவீதமே பயரிடப்பட்டிருந்தது. | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | நெல் அறுவடைகள் மீது பின்தொடர் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| (iii) கம்பஹா மாவட்ட அலுவலகம் தரிசு நில மீள் பயிரிடலிற்காக ரூபா 9,940,557 ஒதுக்கப்பட்டிருந்ததுடன் 91 திட்டங்கள் அமுலாக்குவதற்கு திட்டமிடப்பட்டது. எவ்வாறாயினும், 03 திட்டங்கள் மாத்திரமே பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்பாடுகள் ஆகக் கூடியளவு பயன் பெறக்கூடியவாறு திட்டமிட வேண்டும். |
| (ஆ) வெள்ள சேதங்களிற்காக 180 செயற்திட்டங்கள் செயற்படுத்துவதற்கு ரூபா 198 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் 173 செயற்திட்டங்கள் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் 06 செயற் திட்டங்களின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. பூர்த்தி செய்யப்பட்ட செயற்திட்டங்களிற்காக ரூபா 176,521,549 ஆன செலவினம் ஏற்பட்டிருந்தது. | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | செயல்நடவடிக்கை திட்டத்தை பின்பற்ற வேண்டும். |
| (i) கண்டி மாவட்ட அலுவலகம் குலு கங்கை அறத்தான உட கால்வாயில் வெள்ள சேத தடுப்பு செயற் திட்டங்களின் கீழ் பொறியியலாளர் மதிப்பீடு இல்லாமல் வித்தியாசமான உயர் மட்டங்களில் 3,070 முதல் 3,880 மீற்றர் வரை 6.8 மீற்றர் உயரமுள்ள சுவர் கட்டுவதற்காக 09 கொங்றீட் தூன்களிற்கும் பொறியியலாளர் மதிப்பீடு இல்லாமல் 300X300 மிமீ அளவில் 22 மீற்றர் தூண்கள் நிர்மாணிப்பதற்கும் ரூபா 2,095,599 ஆன தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. ஆனால், வேலை செய்யும் போது திருத்திய மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அனுமதி பெற்றிருக்கவில்லை. | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | பொறியியலாளர் மதிப்பீட்டை பின்பற்ற வேண்டும்.. |
| (ii) வெள்ள சேத தடுப்பு செயற் திட்டங்களின் கீழ் கண்டி மாவட்ட அலுவலகத்திற்கு சொந்தமான மெதபிட்டிய கொடவெல ராஜா கால்வாய் நிர்மாணிப்பதற்காக ரூபா 2,472,000 ஆன மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. புதிய நிர்மாணம் நடைபெறுகின்ற இடத்திலிருந்து பழைய கால்வாயிற்கு 04 மீற்றர்கள் தூரத்தில் நீர்க்கசிவுகள் இருந்ததுடன் பொறியியல் மதிப்பீட்டில் நிர்மாணிக்க வேண்டுமென திட்டமிடப்பட்ட 09 கொங்றீட் பில்லரிற்கு பதிலாக 08 மில்லார் மாத்திரம் நிர்மாணிக்கப் பட்டதுடன் இது தொடர்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | நிர்மாணம் மற்றும் வேலைகளின் தரம் பரிசோதிக்கப்பட்டு கொடுப்பனவுகள் செய்யப்பட வேண்டும். |
| (இ) செயல்நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம், நிலைபேறான தேசிய வெள்ள பாதுகாப்பினால் வினைத்திறனான விவசாய காணியின் பயன்பாடு மற்றும் கட்டமைப்பு | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | மாவட்ட அலுவலகத்திற்கு சொந்தமான சகல சகல பரசூட் |

| | | | |
|---|---|---|---|
| | ஏற்பாடு என்பவற்றின் ஊடாக உற்பத்தியை அதிப்பதற்கு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பரசூட் முறையை பயன்படுத்தி 6,682 ஏக்கர் நெல் வயல்களின் நெற் பயிர்ச் செய்கைக்கு ரூபா 200,000,000 ஒதுக்கப்பட்டிருந்தது. அரசாங்க பங்களிப்பாக ரூபா 144,451,604 கிரயத்தில் 3,265,800 பரசூட் தட்டுகள் விவாயிகளிற்கு விநியோகிக்கப் பட்டிருந்ததென குறிப்பிட்டப்பட்ட போதிலும் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு விவசாயிகளிற்கு வழங்கப்பட்டிருந்த அந்த பரசூட் தட்டுகளின் தொகை 2,817,815 ஆக இருந்தது. விவசாயிகளிடமிருந்து அறவிட வேண்டியிருந்த ரூபா 48,154,221 தொகையில் ரூபா 20,786,974 தொகையே அறவிடப்பட்டிருந்தது. 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாவட்ட அலுவலகங்களிற்கு வழங்கப்பட்ட 447,985 பரசூட் தட்டுக்கள் எதுவும் விவசாயிகளிற்கு விநியோகிக்கப் பட்டிருக்கவில்லை. | | தட்டுகளும் விவசாயிகளிற்கு விநியோகிக்கப்பட வேண்டியதுடன் உரிய பணத்தினையும் அறவிடப்பட வேண்டும். |
| (ஈ) | செயல்நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம், சிறிய நீர்ப்பாசன திருத்த (Kickstart) செயற்திட்டங்கள் 526 செயற்திட்டங்கள் அமுலாக்குவதற்காக ரூபா 188 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2023 திசெம்பர் 31 அளவில் 16 செயற்திட்டங்கள் பூர்த்தியாக்கப்பட்டிருக்காததுடன் 02 திட்டமிடப்பட்ட செயற்திட்டங்கள் பூர்த்தியாக்கப் பட்டிருக்கவில்லை. அந்த செயற்திட்டங்களிற்காக ரூபா 187,314,543 ஆன தொகை விடுவிக்கப் பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 அளவில் செலவினம் ரூபா 176,444,021 ஆக இருந்தது. | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | செயல்நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் திட்டமிடப்பட்ட செயற்திட்டங்கள் பூர்த்திசெய்யப்பட வேண்டும். |
| (உ) | செயல்நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம், 20 கைவிடப்பட்ட குளங்களின் ஒரு பகுதி புதுப்பித்தலிற்காக ரூபா 216 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டில் 11 செயற்திட்டங்கள் மாத்திரமே பூர்த்தியாக்கப்பட்டிருந்ததுடன் 09 கைவிடப்பட்ட குளங்களின் புதுப்பித்தலிற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 216,568,309 இல் ரூபா 145,661,397 செலவழிக்கப்பட்டிருந்தது. | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | செயல்நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் திட்டமிடப்பட்ட செயற்திட்டங்கள் பூர்த்திசெய்யப்பட வேண்டும். |
| (ஊ) | குருநாகல் மாவட்டத்தில் இப்பாவல நீர்தேக்கம் மற்றும் பளுவேவ குறுக்கு அணை என்பவற்றின் புனர் நிர்மாணத்திற்காக முறையே ரூபா 13,393,000 மற்றும் ரூபா 9,360,000 ஆன தொகை மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் அந்த நோக்கத்திற்காக பெறப்பட்டவை பொலநறுவை குறுக்கு அணைக்காக பயன்படுத்தப்பட்ட மண், கொங்றீட் கல் மற்றும் கொங்றீட் கலவை | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | பொருட்கள் உரிய நியமத்திற்கமைய பெறப்பட்டுள்ளதாவென ப் பரிசோதிக்கப்பட்டு கொடுப்பனவுகள் செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இயந்திரம் என்பவற்றிற்காக பயன்படுத்தப் பட்டிருந்ததென கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. அறிக்கை பிரகாரம் நிர்மாணம் நியம எல்லை மற்றும் எதிர்பார்க்கப்பட்ட வலு உறுதிக்குள் இருக்கவிலை என மேலும் அவதானிக்கப்பட்டது. | | |
| (எ) | விவசாய காணி பயன்பாடு மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தியின் வினைத்திறனான பயன்பாட்டின் கீழ் இன்னொரு இடத்திலிரந்து றெட்டகேன விவசாயநில பாதைக்கு மண் ஏற்றியிறக்கல் மற்றும் 380 கன மீற்றர் மண் பயன்படுத்தியதாக தவறாக ரூபா 558,600 சாட்டுதல் செய்யப் பட்டிருந்ததுடன் தலக்கிரயகம விவசாய பாதைக்கு இடப்பட்டிருக்காத 52.29 கனமீற்றர் கிரவலிற்காக தவறாக ரூபா 120,790 சாட்டுதல் செய்யப்பட்டிருந்தது மேலும் அவர்கள் இலவசமாக கிடைத்த 200 கிமீ கிரவலிற்காக கொள்வனவு செய்யப்பட்டதாக கூறி பொய்யாக ரூபா 145,728 சாட்டுதல் செய்திருந்தனர். அத்துடன் வீதிக்கு இடப்பட்டிருக்காத 76.8 கனமீற்றர் கிரவலிற்காக ரூபா 305,280 ஆன கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டதாகவும் நிரப்பட்டடிருக்காத வேலைகளிற்காக ரூபா 74,035 உம் சாட்டுதல் செய்திருந்தது. ஆகவே, மொத்தமாக ரூபா 1,204,433 ஆன தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளபடியாக செயற்பட்டிருக்காத சேவைகளிற்காக கொடுப்பனவுகள் செய்ய வேண்டியதில்லை. |

**3.5 சொத்து முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உலக உணவு செயற்திட்டத்தின் கீழ் திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட CR-0098 ஆம் இலக்க ஜீப் 2015 இல் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன் அந்த ஆண்டிலிருந்தே மாலம்பே வாகன தரிப்பிடத்தில் பயன்படுத்தாமல் தரித்திருந்தது. | இந்த வாகனத்தை பதிவு செய்வது கடினமாக இருந்தது. அதற்காக திரும்ப ஏற்றுக் கொள்வதற்காக ஒழுங்குகள் செய்வதற்கு உலக உணவு நிகழ்ச்சித் திட்டத்தின் இலங்கை பிரதி நிதியின் 2023.10.23 ஆந் திகதிய 7/6/4/1/ CR-0098 ஆம் இலக்க கடிதம் நிறுவனம் அறிவித்திருந்தது. | சில பயன்படுத்த முடியாதிருக்குமாயின் கட்டாயமாக திருத்த முடியாததாக இருக்க வேண்டும். |
| (ஆ) | 25 கமநல சேவை நிலையங்களின் கீழ் முகாமை செய்யப்படுகின்ற 47 எண்ணிக்கையான 04 சக்கர உழவு இயந்திரங்கள், 12 எண்ணிக்கையான 02 இருசக்கர உழவு இயந்திரங்கள் 62 உழவு இயந்திர பெட்டிகள் 56 கல்ரி/ | 85 எண்ணிக்கையான 04 சக்கர உழவியந்திரங்கள் 15 எண்ணிக்கையான 02 சக்கர உழவியந்திரங்கள், 28 உழவு இயந்திர பெட்டிகள், 64 டிஸ் புளொக், 71 கூக் புளொக், 105 | சகல பயன் படுத்தப்படாத சொத்துக்களும் கைதவிர்க்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வெட்டர்கள், 120 டிஸ் புளொக் மற்றும் 224 மக் வீல்கள், கூக் புளொக் 08 வெட்டியந்திரங்கள் மற்றும் 565 ஏனையவை என்பன நடை முறையல்லா சொத்தாக பேணப்பட வேண்டியதுடன் இவை 07 முதல் 25 ஆண்டு காலப் பகுதியாக குறைத்துகாட்டப்பட்டிருந்தது. | மக் வீல்கள், 20 சவல் கட்கள், 03 வெட்டு இயந்திரங்கள் மற்றும் 97 ஏனையவை என்பன பயன்படுத்தப்பட்டிருந்தது. | |
| (இ) | 2020 மார்ச் 10 ஆந் திகதிய கணிப்பீட்டுச் சபையால் ஏலத்திற்கு விட தீர்மானித்து பரிந்துரைக்கப்பட்ட 02 வாகனங்கள் 2020 செப்தெம்பர் 21 ஆந் திகதிய மதிப்பீட்டுச் சபை அறிக்கை வரை ஏலத்திற்கு விடப்பட்டிருக்காத போதிலும் அவை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரையும் பயன்படுத்தப்படாவையாக இருந்தது. | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | திருத்தங்கள் மேற் கொள்ளப்பட்டிருக்கா விடின் இன்னொரு முகவருக்கு மாற்றும் சாத்தியத்தை வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | விவசாய வங்கி முன்னோடி செயற்திட்டத்தில் அமுலாக்கல் முறைமையை கண்காணிப்பதற்கு தலைமை அலுவலகத்தில் கட்டப்பட வேண்டுமென பரிந்துரைக்கப்பட்ட செயற்பாட்டு அறைக்கான 65 அங்குலம் மற்றும் முகாமைத்துவ தகவல் முறைமை பொருத்திய பின்னர் கமநல சேவை குழு என்பன விவசாய வங்கி முன்னோடி செயற்திட்டத்திற்காக தயாரிக்க வேண்டியிருந்ததுடன் நாடு முழுவதும் விவசாய சேவைக் குழுக்கள் 05 சம்சூன் (Sumsung) வகை சுமாட் தொலைக்காடசி விவசாய வங்கி நிதியிலிருந்து ரூபா 2,497,800 இற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அந்த தொலைக் காட்சிகளின் உத்தரவாத காலப்பகுதி 01 ஆண்டாக உள்ளதுடன் உத்தரவாக காலப்பகுதி 08 மாத காலப்பகுதி வரை TV பயன்படுத்தப்பட்டிருக்காததுடன் செயற்பாட்டு அறை வேலைகளும் தொடங்கப்பட்டிருக்கவில்லை. | விவசாய வங்கிகளிற்காக தயாரிக்கப்பட்ட மென்பொருள் முறைமை கண்காணிக்கும் நோக்கில் மற்றும் தொலைக்காட்சி தொகுதி தொடர்பாக குழுக்கள் தலைமை அலுவலகத்தில் கட்டுப்பாட்டு அறை கட்டுவதற்காக கொள்வனவு செய்யப்பட்டதுடன் செயற்பாட்டு அறியின் செயறபாடுகள் விரைவில் தொடங்குவதற்கு பட்டியலிடப்பட்டன. | முகாமைத்துவ தகவல் முறைமை பொருத்தப்பட வேண்டியதுடன் செயற்பாட்டு அறை வேலைகள் உடனடியாக தொடங்க வேண்டும். |
| (உ) | நாரேகன்பிட்டிய உதிரிப்பாக காட்சியறையின் காட்சியறை காப்பாளர் இருப்பு புத்தகத்தில் பொருட் பெறுவனவை உள்ளபடியாக உள்ளடக்கியிருக்கவில்லை. ரயர் பொருள் வழங்கல் கட்டளை வழங்கப்பட்டதென குறிப்பிடப் படுகின்றதுடன் 2021, 2022 மற்றும் 2023 யூன் 12 வரை கொள்வனவு செய்யப்பட்ட ரயர் மீதிகளை திருத்துதல் காரணமாக ரூபா 2,135,679 பெறுமதியான 58 ரயர்கள் மேசடியாக அகற்றப்பட்டது. இது 2024 ஏப்ரல் 31 வரை நட்டங்களை அறவிடுவதற்கோ அல்லது முறையான ஒழுக்காற்று விசாரணைகள் நடாத்தவதற்கு நடவடிக்கை | குறைபாடுகள் விரைவாக மீளாய்வு செய்யப்பட்டன. எழுத்து மூல விசாரணைகள் 2023.06.12 இல் காட்சியறை ஒழுங்கு படுத்தலிற்கு செய்யப்பட்டன. ரயர் மற்றும் பற்றிகளின் இருப்பு மெய்மையாய்வை மூன்று உத்தியோகத்தர் கொண்ட குழுவொன்று நடாத்தியிருந்தது. இது தொடர்பில் பெறப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் காட்சியறைகள் உடனடியாக மூடப்பட வேண்டியிருந்ததுடன் 2023.06.30 இல் குருந்துவத்தை பொலீஸ்சின் முறைப்பாடு | நட்டங்களின் அறவீடு மற்றும் முறையான ஒழுக்க விசாரணை விரைவாக செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எடுக்கப்படவில்லை. | செய்திருந்தது. இதன்படி தாபனவிதிக் கோவையின் பகுதி II இன் அத்தியாயம் XLVII இன் 31:1:8 ஆம் பிரிவு மற்றும் 31:5:2 ஆம் பிரிவிற்கமைய நாரேகன்பிட்டிய விவசாய அபிவிருத்தி திணைக்களத்திற்கு முகவரியிடப்பட்ட கடிதம் மூலம் இணைக்கப்பட்ட காட்சியறை காப்பாளர் தொர்பான கடமைகள் ஆட்டோ உபபாகங்கள், காட்சியறைகள் உடனடியாக நிறுத்தப்பட்டது. சம்பந்தமான கணக்காய்வு விடயங்களிற்கு விசேட கவனம் செலுத்த வேண்டியதுடன் மேலும் அவற்றினை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டன. | |
| (ஊ) | மஹாவேவா யாட்டில் பயன்படுத்தப் பட்டிருக்காத 02 சக்கர உழவு இயந்திரம், 04 சக்கர உழவு இயந்திர பெட்டிகள், 10 கூக் புளொப்பி, 09 Tin Tiller, 04 இன்சின் திருத்த உபபாகங்கள், 05 டோசர் இயந்திரங்கள் மற்றும் ஹம்பாந்தோட்டை எந்திர தளத்தால் 3 புல்டோசர் இயந்திரங்கள் என்பன கைதவிர்க்கப்படாதிருந்தது. | மதிப்பாய்வுச் சபை மதிப்பாய்வு அறிக்கையை வழங்கியிருந்ததுடன் கேள்வி ஆவணங்கள் தயாரிக்கப் பட்டிருந்ததுடன் உரிய இயந்திரங்களின் கைதவிர்ப்பிற்காக தொழில்நுட்ப மதிப்பாய்வு சபைக்கு முன்வைக்கப்பட்டது. நிதியல்லாச் சொத்துக்களை கைதவிர்ப்பதற்கு உடனடியாக படிமுறைகள் எடுக்கப்படும். | நிதியல்லாச் சொத்துக்கள் அனுமதிக்கப்பட வேண்டும். |
| (எ) | மஹாவ இயந்திர தளத்தில் வேலைசெய்யும் நிலையிலுள்ள 04 இயந்திரங்கள் மற்றும் ஹம்பாந்தோட்டை இயந்திர தளத்திலுள்ள 07 இயந்திரங்கள் ஆகக் குறைந்த மட்டத்தில் சேவையை வழங்கியிருந்ததுடன் கொள்வனவு செய்த நாளிலிருந்து சேவையில் ஈடுபடுத்த முடியாத நிலையில் இருந்த DAS 69 சிறிய ஐந்து நில மட்டாப்படுத்தல் இயந்திரம் பயனற்று இருந்தது. | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | இருக்கின்ற இயந்திரங்களை ஆகக் கூடியளவிற்கு பயன்படுத்தவதற்கு முயற்சி எடுக்க வேண்டும். |
| (ஏ) | மஹாவ பொறித் தொகுதியில் 07 இயந்திரங்கள் திருத்தவதற்கோ அல்லது அவற்றினை பயன்படுத்துவதற்கு இயலக் கூடியவாறு செய்யாமல் பயனற்று விடப்பட்டிருந்தது. | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | பயன்படுத்த கூடிய இயந்திரங்கள் முறையாக திருத்தப்பட வேண்டும். |
| (ஐ) | 2020 மார்ச் 10 நடைபெற்ற கணிப்பீட்டுச் சபையின் பரிந்துரைகளின் பிரகாரம் வரிசை அமைச்சால் தவறாக பயன்படுத்தப்பட்ட கைதவிர்க்க வேண்டிய 07 வாகனங்கள் கைதவிர்க்கபடாமல் தவறாக பயன்படுத்தப்பட்டிருந்தது. | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | தீர்மானிக்கப்பட்ட வானங்கள் உடனடியாக அகற்றப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஒ) 2018 ஆம் ஆண்டில் நீர் மகாமைத்துவ திணைக்களத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்கள் ரூபா 15,568,479 உள்ளடங்கலாக ரூபா 25,822,137 இற்கு கொள்வனவு செய்யப் பட்டிருந்தது. தண்ணீர் தரம் பரிசோதிக்கும் இயந்திரம் கொள்வனவு செய்த திகதியிலிருந்து செயற்பாடற்று இருந்தது. | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | உபகரணங்களின் பயன்பாட்டுத் தன்மை வேண்டப்பட்டவாறு பரிசோதிக்கப்பட வேண்டும். |

### 3.6. நிதிரீதியான முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2005/2006 மஹா பருவகாலத்தில் அநுராதபுரம் மாவட்டத்தில் மத்துகம கமநல சேவை நிலையத்தின் 03 உத்தியோகத்தர்களிடமிருந்து சேகரிக்க வெண்டியிருந்த பசளை உதவு தொகையின் பற்றாக்குறை ரூபா 32,542,242 ஆக இருந்ததுடன ஒரு உத்தியோகத்தரிடமிருந்து அறவிட வெண்டிய தொகை ரூபா 77,912 ஆக மாத்திரமாக இருந்தது. மிகுதியாக இருக்கின்ற தொகை ரூபா 32,464,330 ஆக இருந்ததுடன் 2024 மார்ச் 31 வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. இதில் ரூபா 16,193,208 நட்டத்திற்கு பொறுப்பான விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர் சாதாரண ஓய்வுபெறல் முறைமையின் கீழ் அவரது 60 வயதில் ஓய்வுபெற்றிருந்தார். எவ்வாறாயினும் ஓய்வூதிய விதியின் 43(அ) பிரிவின் கீழ் அவரிடமிருந்து சொல்லப்பட்ட நட்டங்களை அறவிடுவதற்கு 2024 மார்ச் 31 அளவில் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு சட்ட மா அதிபரிற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | சட்ட நடவடிக்கை ஊடாக ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் மற்றும் ஏனைய உத்தியோகத் தரிடமிருந்து உடனடியாக நட்டங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.7 கணக்காய்வு ஐயவினாக்களிற்கு பதிலளிக்க தவறியமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டிற்காக வழங்கப்பட்ட 23 கணக்காய்வு ஐய வினாக்கள், 2020 ஆம் ஆண்டிற்காக வழங்கப்பட்ட 15 கணக்காய்வு ஐயவினாக்கள் 2021 ஆம் ஆண்டிற்காக வழங்கப்பட்ட 13 ஐய வினாக்கள், 2022 ஆம் ஆண்டிற்காக வழங்கப்பட்ட 17 ஐய வினாக்கள் மற்றும் 2023 ஆம் ஆண்டிற்காக வழங்கப்பட்ட 09 ஐய வினாக்கள் என்பவற்றிற்கு 2024 மே 29 வரை பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | 2024.05.29 அளவில் 74 கணக்காய்வு ஐய வினாக்கள் பதிலளிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வு ஐயவினாக்களிற்கான பதில்கள் உடனடியாக சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 3.8 முகாமைத்துவ நலிவுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) விவசாயிகள் நம்பிக்கை பெறுப்பு நியத்திடமிருந்து 2015/2016 இல் சேளப் பயிர்ச் செய்கை ரூபா 80,790,000 தொகை 2020/2021 ஆம் ஆண்டில் விசேட சோளப் பயிர்ச் செய்கை ரூபா 200,000,000 தொகையும் 2020 ஆம் ஆண்டில் ரூபா 25,000,000 மற்றும் ரூபா 11,897,009 மற்றும் ரூபா 12,449,008 மற்றும் ரூபா 4,306,145 என்பன 2023 திம்பெர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டியிருந்தது. | 2015/2016 விசேட சோள செயற்திட்டம் விவசாயிகள் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திடமிருந்து அநுராதபுரம் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 5386 விவசாயிகளிற்கு ரூபா 80.79 மில்லியக் தொகை வழங்கியிருந்ததுடன் 2024.05.20 இல் ரூபா 11.12 மில்லியன் அறவிட வேண்டியிருந்தது. நீதி மன்றத்திற்கு தொடர்புபடுத்தப்பட்ட விவசாயிகளின் எண்ணிக்கை 1037 ஆக இருந்தது. ஆகவே, நீதி மன்ற செயற்பாடுகள் இருந்தமையால் இது கடன் அறவிடுவதற்கு விசேட கால எல்லையை வெளிப்படுத்துவதற்கு சாத்தியம் இருக்கவில்லை.<br>சோள பயிர்ச் செய்கைக்காக 2020/21 பருவ காலத்தின் பொது விவசாயிகள் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திடமிருந்து வழங்கப்பட்ட ரூபா 200 மில்லியனில் 2024.05.20 இல் ரூபா 188.75 மில்லியன் அறவிட வேண்டியிருந்ததுடன் 04 காநல சேவை நிலையங்களில் மாத்திரம் ரூபா 11.25 மில்லியன் மாத்திரமே இதுவரை சாட்டுதல் செய்யப்பட்டிருந்தது. | கடன்கள் மீது தொடர்ச்சியான பின்தொடர் நடவடிக்கை எடுப்பதற்கும் உடனடியாக அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) சேதனப் பசளைகளை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் அமுலாக்கப்பட் ''சரலங்கா'' நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் 21 மாவட்டங்களில் 318 விவசாயிகளிற்கு ரூபா 69,850,000 வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் திசெம்பர் 31 அளவில் அறவிட வேண்டியிருந்த கடன் தொகை ரூபா 15,066,874 ஆகும். அந்த கடன்களின் அறிவீடுகள் மிகவும் நலிவாக உள்ளது. | ''சரலங்கா'' நிகழ்ச்சத்திட்டத்தின் கீழ் 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் விவசாயிகள் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தால் விவசாயிகளிற்கு வழங்கப்பட்ட தொகையிலிருந்து 2024.05.20 இல் ரூபா 55,898,365 அறவிட வேண்டியிருந்ததுடன் மேலும் ரூபா 13,951,635 செலுத்த வேண்டியிருந்தது. | கடன்கள் மீது தொடர்ச்சியான பின்தொடர் நடவடிக்கை எடுப்பதற்கும் உடனடியாக அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) 2000/2007 காலப்பகுதியின் போது திணைக்களம் நெல் கொள்வனவு செய்வதற்கு திறைசேரியால் நேரடியாக முற்பணம் வழங்கப் பட்டிருந்தது. ஆனால் பதுளை மற்றும் அநுராதபுர மாவட்ட அலுவல கங்களிலிருந்து அறவிட வேண்டியிருந்த தொகை ரூபா 58,958,665 ஆக இருந்ததுடன் 2023 | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | கடன்கள் மீது தொடர்ச்சியான பின்தொடர் நடவடிக்கை எடுப்பதற்கும் உடனடியாக அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திசெம்பர் 31 வரை அவற்றினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | 2020 மார்ச் 15 இல் லங்கா அரச வலையமைப்பு செயற்திட்டத்தால் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்த கம்பியல்லா இன்டநெற் முறைமைக்கு சொந்தமான ரூபா 978,013 பெறுமதியான சோதனை நிலையம் (checkpoint) 3200 firewall காணாமல் போனமை தொடர்பில் 2022 ஏப்ரல் 22 இல் வழங்கப்பட்ட ஆரம்ப விசாரணை அறிக்கை பிரகாரம், நீர் முகாமைத்துவ பிரிவு தலைவரால் நட்டங்கள் வெளிப்படுத்தப்பட்ட பொறியியலாளர் 2020 நவம்பர் 10 இல் ஓய்வூதிய தலைப்பு 2/17 மூலம் ஓய்வு பெற்றிருந்தார் அதேநேரம் ஆரம்ப விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அவருடைய பதவியுயர்வு தொடர்பான சம்பள நிலுவையாக 2022 திசெம்பர் மாதத்தில் ரூபா 1,469,725 ஆன கொடுப்பனவில் மேற்குறிப்பிட்ட நட்டங்களை அறவிடாமலும் பிரச்சனைக்குரியவரின் 2/17 மூலம் தொடர்புபட்ட உத்தியோகத்தர் ஓய்வு பெற்ற பின்னர் மீள் நியமனம் செய்தலும் கணக்காய்வின் போது ஐயத்திற்கிடமாக இருந்தது. | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.. | ஓய்வுபெற்ற உத்தியோகத்தரிட மிருந்து நட்டங்களை அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் 2021 பயிர்ச் செய்கை காலத்தின் பொது தரிசு நில நெற் பயிர்ச் செய்கைக்காக கண்டி மாவட்ட கமநல அபிவிருத்தி அலுவலகத்திற்கு ரூபா 8,251,750 ஆன தொகையை வழங்கியிருந்ததுடன் 11 விவசாய குழுக்களிற்கு தரிசு நில நெற் பயிர்ச் செய்கைக்காக வட்டியற்ற கடனாகவும் வழங்கியிருந்தது. சொல்லப்பட்ட கடன் 06 மாதங்களிற்குள் அறவிட வேண்டியிருந்ததுடன் 2023 திசெம்பர் 31 அளவில் மேற்படி ரூபா 2,459,301 தொகை அறவிட வேண்டியிருந்தது. | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | கடன்கள் மீது தொடர்ச்சியான பின்தொடர் நடவடிக்கை எடுப்பதற்கும் உடனடியாக அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | 2023 மே 12 ஆந் திகதிய 02/2021(VIII) ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி மற்றும் 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009 ஆம் இலக்க பொது நர்வாக | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | கைவிரலடையாள தரவு பிரதிகளை தொடர்ச்சியாக கண்காணித்து பரிசோதனை செய்யப்பட |

| | | | |
|---|---|---|---|
| | சுற்றறிக்கை என்பவற்றின் பிரகாரம் கண்டி மாவட்ட அலுவலகத்தில் வேலை செய்கின்ற அரச உத்தியோகத்தர்களின் உள்வருகை மற்றும் வெளிச் செல்லலை பதிவதற்கு 45 கமநல சேவை நிலையங்கள் ஒவ்வொன்றும் ரூபா 54,000 வீதத்திலும் ரூபா 2,430,000 மொத்த கிரயத்தில் 45 கைவிரலடையாள இயந்திரங்களை கொள்வனவு செய்திருந்தது. எவ்வாறாயினும் நிலையம் கைவிரலடையாள தரவு பிரதியை பெற்று பரிசோதிகப்பட்டிருக்காததுடன் மாவட்ட அலுவலகத்தின் உள்வருகை மற்றும் வெளிச்செல்கை மேற்பார்வை செய்யப்பட்டிருக்கவில்லை. | | வேண்டும். |
| (எ) | 2022 ஆகஸ்ட் 10 இல் உள்நாட்டு கலப்பின சோள விதை உற்பத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்காக விவசாயிகள் நம்பிக்கை பொறுப்பு நிதியம் 2 சதவீத வட்டியுடன் ரூபா 9,375,000 தொகை வழங்கியிருந்ததுடன் 2023 சனவரி 11 இற்கு முன்னர் ரூபா 9,562,500 ஆன தொகை செலுத்தப்பட வேண்டும் ஆனால் 2023 திசெம்பர் 31 இல் ரூபா 3,487,500 ஆன தொகை இன்னமும் செலுத்தப்படவில்லை. ஆகவே, அந்த தொகைக்காக ஒக்கம்பட்டிய விவசாய வங்கியால் 15 விவசாயிகளிகாக ரூபா 2,700,000 ஆன தொகை வழங்கியிருந்ததுடன் அத்தொகை 06 மாதங்களிற்குள் திருப்பிச் செலுத்த வேண்டியிருந்தது. ஆனால் 2023 திசெம்பர் 31 வரையும் விவசாயிகளிடமிருந்து எத்தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | கடன்கள் மீது தொடர்ச்சியான பின்தொடர் நடவடிக்கை எடுப்பதற்கும் உடனடியாக அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஏ) | 2022/2023 பருவா காலத்தின் தேசத்தின் விதைத் தேவைகளை செய்வதற்கு விவசாயிகள் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திடமிருந்து 2022 ஆகஸ்ட் மாதத்தில் ரூபா 50,000,000 ஆன தொகை மற்றும் 2020/2021 பருவ காலத்தில் விசேட சேள பயிர்ச் செய்கை திட்டத்திற்காக 2020 ஆம் ஆண்டில் பெறப்பட்ட ரூபா 136,090,000 தொகையிலிருந்து ரூபா 25,400,000 தொகை பெறப்பட்டிருந்ததுடன் பெறப்பட்டவை வினைத்திறனாக பயன் படுத்தப்படாமையால் விவசாய நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு ரூபா 63,910,000 திருப்பிச் செலுத்தப்பட்டிருந்தது. | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | விவசாயிகள் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திடமிருந்து பெறப்பட்ட பணம் வினைத்திறனாக பயன்படுத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஐ) 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 104 விசாரணைகள், 77 ஆரம்ப விசாரணைகள், 431 ஒழுக்காற்று விசாரணைகளில் 103 விசாரணைகள் நிலுவையில் உள்ளதுடன் அதில் 293 ஒழுக்காற்று விசாரணைக் கோவைகள் 05 ஆண்டுகள் பினேக்கியிருந்தது அவர்களிற்கிடையிலான வழக்கு 03 மாதங்களிற்குள் தீர்க்கப்பட வேண்டியிருந்தது. நி.பி 104(4) படி 37 விசாரணை கொவைகள் உள்ளதுடன் ஒழுக்காற்று விசாரணைகளிலிருந்து அரச வருமானத்திற்கு கிடைக்க வேண்டிய மொத்த தொகை ரூபா 66,194,999 ஆக இருந்தது. | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | ஒழுக்காற்று விசாரணைகள் விரைவாக பூர்த்தியாக்கப்பட வேண்டியதுடன் அரச வருமானத்திற்கு கிடைக்க வேண்டிய தொகை அறவிடப்பட வேண்டும். |
| (ஒ) 2014 ஆம் ஆண்டில் நெல் காணி நில மீட்டெடுப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நெல் வயல்கள் நெற் காணியாக காணிப் பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டிருந்த தலிவெல விவசாய சேவை பகுதியில் குடகல தெற்கு டொமைனில் நன்சர கொட கும்புறு ஜயாவில் அமைந்திருந்த நன்சரா நெல் காணி விவசாய அபிவிருத்தி ஆணையாளரின் எழுத்து மூல அனுமதி இல்லாமல் 2019 இலிருந்து ஜயாவில் ஏனைய நெற் காணிகளிற்கு நீர் மற்றும் விவசாய உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்தது. விவசாய அபிவிருத்தி ஆணையாளர் ஏனைய பயிர்ச் செய்யையாளர்களின் சுவீகரிப்பை தடுக்கும் நோக்கில் மேலதிக உணவு பயிர்ச் செய்கைக்கு தொடர்புபட்ட அந்த நெற் காணி உரிமையாளருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | சாத்தியமானளவு விரைவாக விவசாயிகளுடைய பிரச்சனைகளை தீர்ப்பதற்கு முயற்சி எடுப்பப்பட வேண்டும். |
| (ஓ) 2022 ஒக்தோபர் 23 இல் 2022/23 பருவ காலத்தின் போது விவசாயிகளிற்கு மாத்தளை மாவட்டத்தில் 23 கமநல சேவை நிலையங்களிற்கு தனியார் வருகைகளால் சிக்கன பசளை விநியோகத்தின் போது முறையான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையிலிருந்து மாறுபட்டிருந்த மாவட்ட அலுவலகம் மற்றும் சிக்கன பசளை விநியோகத்தர்களால் கடமைகளை பாதிக்கின்ற நொக்கில் செயற்பட்டனர். விவசாய அபிவிருத்தி திணைக்களத்தின் விவசாய அபிவிருத்தியை விரும்பி அரசாங்க முகவர் என்ற பெயரை கொண்டிருக்கின்ற பசளை பற்றுச் சீட்டுகள் (GRN) அச்சிடப்பட்டிருந்ததுடன் எவ்வித ஆவணங்களும் இல்லாமல் | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | சட்ட விரோத கொடுக்கல் வாங்கல்களை தவிர்ப்பதற்கு தேவையான படிமுறைகளை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கம்பனிகளின் பிரதிநிதிகளால் கமநல சேவை நிலையங்களிற்கு விநியோகிக்கப்பட்டிருந்தது. இதன்படி, கொடுப்பனவை பரிந்துரைக்கும் உத்தயோகத்தர் தொடரிலக்கத்தை இடுவதற்கான அறிவினை கொண்டிருக்கவில்லை. பசளை பற்றுச்சீட்டு புத்தகம் ஒவ்வொரு கமநல சேவை நிலையங்களாலும் பயன்படுத்தப்பட்டிருந்தது அல்லது அவற்றிற்கு ஏதாவது பதிவேடுகளை வைத்திருக்கின்றது. | | |
| (ஔ) | 2004 ஆம் ஆண்டிலிருந்து தற்போது வரை மஹரகம் விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவிப் பிரிவின் 527/A ஆம் இலக்க காணிப் பதிவின் 44 ஆம் தொடரிலக்கத்தின் கீழான காணியில் சட்ட விரோதமாக 6 நிரந்தர வீடுகள் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் ஏற்கனவே இருந்த நிரந்தர கட்டிடம் 42 ஆம் தொடரிலக்கத்திலுள்ள காணியில் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. அதிகாரச் சட்டத்தின் 32.1 மற்றும் 33.1 ஆம் பிரிவுகளில் குறிப்பிடப்பட்டவாறு காணி உரிமையாளர்கள் மற்றும் குடியிருப்பாளர்கள் விவசாய அபிவிருத்தி ஆணையாளருக்கு அறிவிக்காமையால் சட்டத்தின் கீழ் குற்றவாளியாகவும் உள்ளனர். விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவி உத்தியோகத்தர்கள் மற்றும் 2004 இலிருந்து வேலைசெய்கின்ற ஏனைய பொறுப்புடைய உத்தியோகத்தர்கள் சட்டவிரோத குடியிருப்பு மற்றும் நிர்மாணங்களிற்கு எதிராக முறைபடி நடவடிக்கை எடுக்கத் தவறியிருந்தனர். நீர் மற்றும் வெள்ளப் பாதிப்பிற்கு முகம்கொடுத்தல் என்பவற்றால் சுற்றியுள்ள குடியிருப்பாளர்கள் மற்றும் உள்ளூர் குடியிருப்பார்கள் வெளியேறினர். இது நிலையங்களிற்கு அறிவித்த போதிலும் 30.1 ஆம் பிரிவின் பிரகாரம் சட்ட விரோத குடியிருப்பு மற்றும் சட்ட விரோத நிர்மாணிப்புகள் மற்றும் பயிர்ச் செய்கைகள் தொடர்பில் தற்போது வரை முறையான நடவடிக்கை எதுவும் எடுத்திருக்கவில்லை. அவர்கள் நெற் காணிகளில் நெற் பயிர்ச்செய்கை தொடங்குவதற்கு தீர்மானித்திருந்தனர். | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | சட்டவிரோத நிர்மாண பிரச்சனைகளிற்கு முறையாக தீர்வு காணப்பட வேண்டும். |

## 4. மனிதவள முகாமைத்துவம்

### 4.1 இணைக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்தின் அனுமதிக்கப்பட்ட பதவியணி 19,764 ஆக இருந்ததுடன் மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை 5,723 ஆக இருந்தது. | 2024.04.30 இல் உள்ளவாறு இந்த திணைக்களத்தின் இணைக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் 19,764 ஆக இருந்ததுடன் 48 பதவிகளிற்கான உள்ளபடியான பதவியணி 13,930 ஆக இருந்ததுடன் 5,834 ஆன வெற்றிடங்கள் நிலவின. 2023 ஆம் ஆண்டில் திணைக்களமானது 08 பதவிகளிற்காக 369 உத்தி யோகத்தர்களை சேர்த்திருந்தது. அவசியமான உத்தியோகத்தர்கள் சேர்த்தலின் விபரங்களை பிரதம மந்திரி அலுவலகம் மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் என்பவற்றிற்கு அறிக்கை தயாரித்து அனுப்புவதற்கு ஒழுங்குகள் செயய்யப்படுகின்றன. | முறையான மதிப்பாய்வு செய்ய வேண்டியதுடன் அவசியமான வெற்றிடங்களை நிரப்புவதறகு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | அரசாங்க உத்தியோகத்தர்களை (வகுதி இல 01) இடம்மாற்றுதல் தொடர்பில் பொது நிர்வாக அமைச்சின் தாபன விதிக் கோவையின் அத்தியாயம் XVIII இலுள்ள ஏற்பாடுகள் மூலம் 2009 பெப்ரவரி 20 ஆந் திகதிய 1589/30 ஆம் இலக்க (அதிவிசேட) மற்றும் 2001 ஆகஸ்ட 22 ஆந் திகதிய 18/2001 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை என்பவற்றின் பிரகாரம் 05 ஆண்டுகளாக ஒரே பதவி/ நிலையத்தில் கடமையாற்றும் ஒவ்வொரு உத்தியோகத்தரும் இடமாற்றம் செய்யப்பட வேண்டிய போதிலும் கண்டி மாவட்ட கமநல சேவைகள் நிலையத்தில் 28 உத்தியோகத்தர்கள் 05 இற்கும் 18 ஆண்டுகளிற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் ஒரே இடத்தில் வேலைக்கமர்த்தப்பட்டிருந்தனர். | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை பிரகாரம் இடமாற்றம் செய்யப்பட வேண்டும். |
| (இ) | 2012 யூன் 20 ஆந் திகதிய DMS/G2/56/01 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை பிரகாரம் சீனா அரசாங்கத்தால் வழங்கப்பட்ட இயந்திரங்களிற்காக 05 நிகழ்ச்சித் | தொழில்நுட்ப உத்தியோகத்தரின் (எந்திரவியல்) சகல 05 அனுமதிக்கப்பட்ட பதவிகளும் வெற்றிடமாக இருந்ததுடன் 2021.12.04 இல் நடைபெற்ற வெற்றிடங்களை நிரப்பவது | தீர்வாக ஓய்வு பெற்றோரை மீள் நியமனம் செய்வதற்கு பதிலாக உத்தியோகத்தர்கள் |

| | | | |
|---|---|---|---|
| | திட்ட உத்தியோகத்தர்கள் (எந்திரவியல்), தொழில்நுட்ப (எத்திரவியல்) பொன்ற 08 பதவி வெற்றிடங்கள் 2024 மார்ச் 31 வரை நிரப்பப்பட்டிருக்கவில்லை.<br>எவ்வாறாயினும், ஓய்வு பெற்ற உத்தியோகத்தரை திரும்ப சேர்ப்பதற்கு பொதுச் சேவை ஆணைக்குழு அனுமதி பெற வேண்டும் போது 10 ஆண்டுகளில் சேர்க்கப்பட்டிருக்காத தொழில்நுட்ப மற்றும் எந்திரவியல் உத்தி யோகத்தர்களை பயிற்றுவிப்பதற்கு எந்திரவியல் அத்தியட்சகரின் அனுமதி வேண்டப்பட்டிருந்தது. | தொடர்பான திறந்த எழுத்து பரிச்சையின் பெறுபேறுகளின் பிரகாரம் ஒரு விண்ணப்பதாரியே சித்தியடைந்திரந்தார் இதன்படி, சொல்லப்பட்ட விண்ணப்பதாரி நேர்முக பரீட்சைக்கு அனுமதிக்கப்பட்டிருந்தார். நேர்முக பரீட்சை ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கவில்லை. தொழில்நுட்ப உத்தியோகத்தரின் (எந்திரவியல்) சகல 05 அனுமதிக்கப்பட்ட பதவிகளும் இன்னமும் வெற்றிடமாக இருந்தது. ஆகவே, இந்த திணைக்களத்தின் சேவையிலிருந்து ஓய்வுபெற்றிருந்த PA.ஆனந்த வீரவன்ச மாஜா எந்திரவியல் அத்தியட்சகர் ஒப்பந்த அடிப்படையில் மீள் நியமனம் செய்வதற்காக பொதுச் சேவை ஆணைக்குழுவின் வேண்டுகையில் அனுமதி பெறப்பட்டதன் அடிப்படையில் 2024.02.12 முதல் 2025.02.08 வரை சேர்க்கப்பட்டிருந்தார். | நிரந்தர அடிப்படையில் சேர்க்கப்பட வெண்டும். |
| (ஈ) | ஹம்பாந்தோட்டை மாவட்ட அலுவலகத்தில் வேலை செய்யும் நிலையிலுள்ள 06 இயந்திரங்களிற்காக 06 இயந்திர செயற்பாட்டாளர்கள் ஈடுபடுத்தப் பட்டிருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டில் 04 இயந்திரங்கள் எவ்வித வேலைகளிற்கும் பயன்படுத்தப் பட்டிருக்கவில்லை. இயந்திர செயற்பாட்டாளர்களிற்கு எவ்வித வேலைகளும் ஒதுக்கப்பட்டிருக்காததுடன் அவர்கள் தினமும் மாவட்ட அலுவலகத்திற்கு அறிக்கையிட்டிருக்கவில்லை. | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | ஒரு புதிய முறைமை ஈடுபடுத்தப்பட வேண்டியதுடன் இயந்திரத்தை முழுமையாகவும் வினைத்திறனுடனும் பயன்படுத்த வேண்டும். |